1981 ஏப்ரல் 15]

தொழில்கள் அமைக்கக் கூடிய இந்த நல்ல நேரத்திலே சாத்தான்குளம் ஒன்றியத்தில், சாத்தான்குளத்தில் இது போன்ற பல்புகள் தயாரிக்க மூலப்பொருள்கள் நல்லமுறையில் இருக்கிறது. எனவே, அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார் துறையில் Kalpana Lamp Compononts pilvate Limited என்ற நிறுவனம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. நான் இப்பொழுது சொன்னது, அரசினுடைய ஆய்விலே, அரசின் சார்பிலே தனியாக ஒரு தொழிற்சாலையைத் துவங்கும் எண்ணம் இப்பொழுது இல்லை என்பதாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் உள்ள கிராமங்களில் போடப்பட்டுள்ள தெரு விளக்குகளில் முன்னாலே போடப்பட்டது, ஸ்க்ரு டைப் பல்புகளாக இருந்தது, இப்பொழுது பின் டைப் பல்புகள் போடுகிற காரணத்தாலே மழை வருகிற நேரத்திலே, மழைத் தண்ணீர் உள்ளே போய், பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. அதைத் தடுப்பதற்காக, அரசு உடனடியாக அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே போடப்படுகிற பல்புகளை மின்சார இலாகாவினர் வாங்குகிறார்களா அல்லது உள்ளாட்சித் துறையினர் வாங்குகிறார்களா என்று தெரியாது. இருவரிலே ஒருவர் வாங்குவார்கள். நல்ல பல்புகளாக வாங்கச் சொல்லி அவர்களிடத்திலே கேட்கலாம்.

நீலகிரி மலைச் சரிவில் வசிக்கும் மலைவழ் மக்களின் கோரிக்கைகள்

*வினா எண். 707—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் நீலகிரி மலைச்சரிவில் மானார், அத்திக்கடவு, பரளிப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ்

மக்களின் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்று கோவை கிழக்கு பேரவைத் தொகுதி உறுப்பினரால் கொடுக்கப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன நட வடிக்கை எடுத்துள்ளது?

(இ) அந்த ஆதிவாசி மக்கள் கால்நடையாக வந்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் காரியாலயம் முன்பு தாணா போராட்டம் நடத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஈ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், பரளிகிளையின் கூட்டத்தில் பரளி, அத்திக்கடவு, பில்லூர் பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகளின் குறைகளை தீர்க்கும் பொருட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் ஒன்று கோவை கிழக்கு பேரவை தொகுதி உறுப்பினர் மூலமாக அரசுக்கு 7—2—1980 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட தீர்மானங்களடங்கிய மகஜரின் நகல் ஒன்று கோவை மாவட்ட ஆட்சியருக்கு நடவடிக்கைக்கு அனுப் பப்பட்டு ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு மட்டத்தில் சம்மந்தப்பட்ட துறைகளுக்கும் நகலின் பகுதி நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ) தெரியும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளரால் கோரிக்கை மனுவும் தர்ணா பற்றிய மனுவும் 23—9—1980 அன்று மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப் பட்டது. 24—9—1980 அன்று நேரில் சென்று தர்ணாவைக் கைவிடுமாறு தனித் தாசில்தார் அவர்கள் கேட்டுக்கொண்ட பொழுது, எற்கனவே திட்டமிட்டபடி அமைதியான முறையில் தர்ணாவும் பாதயாத்திரையும் நடத்தப்படும் எனறு விவசாயிகள் சங்கம் சார்பாக தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே அமைதியான முறையில் 25—9—1980 ல் தர்ணா நடத்தப் பட்டது.

(ஈ) அவர்களது கோரிக்கைகளின் பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 10-40]

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, சுமார் 3 ஆண்டு களாக இந்த ஆதிவாசிகள் 100 செட்டில்மெண்டுகளில் வசிக்

*1981 ஏப்ரல் 15]*

கின்ற 3,000-க்கும் மேற்பட்ட ஆதிவாசிக் குடும்பங்கள் குடி தண்ணீர் மற்றும் வேலை வசதிகள் விவசாயத்திற்கு அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய நிலத்தில் அவர்களுககு உத்தரவாதம். குறைந்த பட்சம் அவர்களுக்குத் தேவையான கோரிக்கைகளை முன் வைத்தும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. நானும் மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே நேரில் சென்று பார்த்தேன். ஆகவே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் ரிப்போர்ட்டு செய்தாலும் அமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்த இடத்திற்கு நேரில் வந்து பார்த்து நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகளுககு குடியிருக்க வீட்டு வசதி, பள்ளி வசதி, விவசாயம் செய்ய உழவு மாடுகள், விவசா யப் பொருள்கள் ஆகியவை ஆதிதிராவட நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதி, மருத்துவ வசதி, விபத்து மற்றும் நோய்க்காலத்தில் ஆம்புலன்ஸ் வசதி ஆகியவை பஞ்சாயத்து அபிவிருத்தி துறை மூலமாகவும் வனத்துறை மூலமாகவும் வேலை வாய்ப்பு போன்ற வசதிகள் தவறாமல் அவ்வப்பொழுது அவர்களது தேவைகளை அனுசரிதது வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் கூட்டுறவு பண்டகசாலை அமைக்கவும் மறறும் வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்த்தல், வனத்துறையில் காவலர் போன்ற வேலைகளுக்கு முன்னுரிமை வழங்கல் முதலியவை குறித்து ஆவன செய்யும்படி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிக்கு நேரடியாக வந்து குறைகளை களைய வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அதை நான் நேரிலே உறுப்பினர் அவர்களிடத்தில் பேசுகின்றபொழுது ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். கூடிய விரைவில் அந்தப் பகு திக்கு நேரடியாக வந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அங்கே கல்வி வசதிக் காக, பள்ளிக்கூடம், குடிநீர் இதற்கெல்லாம் ஏற்பாடுகள் செய்யபட்டிருக்கிறது என்பது பொதுவாகத் தரப்படக்கூடிய ரிப்போர்ட்டு. அவர்களுடைய குழந்தைகள் படிக்க வாய்ப் பில்லை. அங்கே 50 பிள்ளைகளுக்கு மேல் படிக்க பள்ளிக் கூடம் இல்லை. அங்கே 3,000 பேர்கள் இருக்கிறார்கள். எனவே இந்த மாதிரி நடவடிக்கைகளை நேரில் பார்த்து நடவடிக்கை எடுக்காவிட்டால் அதிகாரிகள் கொடுக்கின்ற

ரிப்போர்ட்டு மட்டும் நடவடிக்கை ஆகாது என்பதை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் காலத்திலே அந்த இடத்திற்கு வந்து நேரடியாகப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன:

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைத் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளார். இதை அவையில் எழுப்ப என் இசைவை ஏன் அளிக்கவேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு ஆர். கருப்பையா அவர்களும் இதே பிரச்சினை குறித்து ஒரு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் தமிழக அரசின் தொழிலாளர் நலக் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது உங்களுக்குத் தெரியும். அதில் கலந்து கொண்டு நானும் மற்றக் கட்சியைச் சேர்ந்து சட்டப் பேரவை உறுப்பினர்களும் கடுமையாக விமர்சனம் செய்து, பல ஸ்தூலமான வாதங்களையும் விவரங்களையும் முன் வைத்தது உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் எங்களது வாதத்திற்கும், விவரத்திற்கும், நேரான பதில் கூறாமல், இரண்டு முக்கியமான விஷயங்களை அஸ்திவாரமாகக் கொண்டு பதில் கூறினார்.